Register No. | | | | | | | |

**TA3A** | 5879–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

## LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year — Third Semester

## CONSTITUTIONAL LAW – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ...LLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்ககவும்.

1. Freedom of trade, commerce and intercourse throughout the territory of India shall be free, but subject to provisions under Articles 302 to 305 – Analyse.

   இந்திய எல்லை முழுமைக்கும் உட்பட்டு வியாபாரம், வர்த்தகம் மற்றும் வணிகதொடர்பு சுதந்திரத்திற்கு தடையில்லை. ஆனால், ஷரத்து 302 முதல் 305 வரையிலான சட்டவிதி முறைகளுக்கு உட்பட்டது – பகுத்தாய்வு செய்க.

2. Define 'Ordinary bill' and 'Money bill'. Explain in detail the procedure for passing a money bill and ordinary bill.

   'சாதாரண மசோதா' மற்றும் 'பண மசோதா' வரையறை செய். சாதாரண மசோதா மற்றும் பண மசோதா ஆகியவற்றை நிறைவேற்றம் செய்வதற்கான நடைமுறையை தெளிவாக விளக்குக.

3. List out the privileges and immunities available to Members of Parliament and State Legislative Assemblies.

   நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய சிறப்புரிமைகள் மற்றும் விதிவிலக்குகளை பட்டியலிடுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்ககவும்.

4. Describe the composition of the Electoral College and the manner of election in electing the President of India.

இந்திய குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு உண்டான வாக்காளர் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் எம்முறையில் குடியரசுத்தலைவர் தேர்தல் நடத்தப்படுகின்றது என்பதையும் விவரிக்கவும்.

5. Explain the composition of Council of States and House of people.

மாநிலங்களவை மற்றும் மக்களவையின் அமைப்பு பற்றி விவரிக்கவும்.

6. Explain the grounds on which the Review Jurisdiction can be invoked before the Supreme Court of India.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்பாக எத்தகைய காரணங்களைக் கொண்டு நீதித்துறை மறு ஆய்வு ஆள்வரை வேண்டப்படுகின்றது.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Doctrine of Immunity of Instrumentalities.

அரசாங்க அங்கங்களின் சட்ட விலக்களிப்புக் கோட்பாடு.

(b) Doctrine of Colourable Legislation.

முறையது போலமை சட்டமியற்றும் கோட்பாடு (அ) பொய்மை கோட்பாடு.

(c) Writ of Prohibition.

தடை உறுத்தும் நீதிப்பேராணை.

(d) State Public Service Commissions.

மாநில அரசுப் பணியாளர் தேர்வு ஆணையங்கள்.

(e) Disputes relating to Inter-state River Water (Art.262)

மாநிலங்களிடையே நதி நீர் குறித்த சர்ச்சைகள் (ஷரத்து 262)

(f) Doctrine of prospective overruling.

பின்தேதியிட்டு தீர்ப்பு முடிவை இரத்து செய்தல் கோட்பாடு.

(g) Full Faith and Credit Clause.

முழுநம்பிக்கை மற்றும் நன்மதிப்பு வகையம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்து காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Parliament of India enacted a law providing reservation for Economically weaker section (EBC) in the Central and State institutions of higher education. It was challenged before the Supreme Court on the ground of violation of Social Justice. Decide.

இந்திய நாடாளுமன்றம் மத்திய மற்றும் மாநில அரசு உயர்கல்வி நிறுவனங்களில் பொருளாதார நிலை குன்றிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்க ஒரு சட்டத்தை இயற்றியது. அது சமூக நீதியை மீறுவதாக உள்ளது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்காடப்பட்டது. தீர்மானிக்கவும்.

9. An editor of a weekly magazine was punished with 15 days simple imprisonment by Speaker of a State Legislative Assembly for breach of privileges of the Assembly. Can the editor challenge the same before courts?

ஒரு மாநில சட்டமன்றத்தின் சபாநாயகர், ஒரு வார இதழின் செய்தி ஆசிரியருக்கு, பதினைந்து நாட்கள் சாதாரண சிறைத்தண்டனையை, அவையை அவமதித்ததற்காக விதித்தார். இதனை எதிர்த்து செய்தி ஆசிரியர் நீதிமன்றங்களில் வழக்கிட முடியுமா?

10. A prisoner was found in illegal custody for 14 years in a prison, because of the negligence of Prison Authorities. He was not awarded with such imprisonment by court. Decide the liability of state.

ஒரு சிறைச்சாலையில், ஒரு சிறைவாசி 14 ஆண்டுகளாக சட்ட விரோத காவலில், சிறை அதிகாரிகளின் கவனக்குறைவால் இருக்க நேரிட்டது. நீதிமன்றத்தால் அவருக்கு அத்தகைய தண்டனை வழங்கப்படவில்லை. அரசின் பொறுப்பு நிலையை தீர்மானிக்கவும்.

Register No. | | | | | | | | |

**TA3B**

5880–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

LAND LAWS

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the various land tenure that prevailed in our country before Independence.

நமது நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் வழக்கத்திலிருந்த பல்வேறு நிலக்குத்தகை முறைகள் பற்றி விளக்கவும்.

2. What is meant by Standard Acre? What is the ceiling area of certain institutions under Sec. 5 of the Land Ceiling Act. 1961?

ஒரு தரநிலை ஏக்கர் என்றால் என்ன? 1961-ம் ஆண்டின் நில உச்சவரம்புச் சட்டத்தின் பிரிவு 5 ன் கீழே கொடுக்கப்பட்டுள்ள சிலவகையான நிறுவனங்களின் நில உச்சவரம்பு அளவு எவ்வளவு?

3. Explain the grounds under which a tenant can be evicted under the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act. 1960.

தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டம் 1960-ன் கீழ் ஒரு வாடகைதாரரை வெளியேற்றுவதற்கான அனைத்து காரணங்களையும் விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the salient features of the Tamil Nadu Occupants of Kudiviruppu (Conferment of Ownership) Act, 1971.

1971-ம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு உறைஞர் (உடைமை உரிமை வழங்குச்) சட்டத்தின் முக்கியக் கூறுகளை விவாதிக்க.

5. Discuss the Social Impact Assessment study under the LARR Act, 2013.

நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம், 2013-ன் கீழ் சமூக தாக்க மதிப்பீடு ஆய்வு பற்றி விவாதிக்க.

6. Mention the rights and liabilities of cultivating tenant under the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956.

1956 ஆண்டின் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாய வாடகை செலுத்துச்) சட்டத்தின் கீழ் பயிரிடும் குத்தகைதாரரின் உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Melwaram and Kudiwaram

மேல்வாரம் மற்றும் குடிவாரம்

(b) Land Commissioner

நில ஆணையர்

(c) Building

கட்டிடம்

(d) Eminent Domain

சொத்தெடுப்பு உரிமை

(e) Sub-letting

கீழ்க்குத்தகை

(f) Service Inams

சேவை இனாம்கள்

(g) Rights and obligations of a Zamindar.

ஜமீன்தாரின் உரிமைகள் மற்றும் கடமைகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' the landlord of a house often interferes with the water supply to the tenant B'. Discuss the remedy available to 'B'.

'A' என்னும் வீட்டுரிமையாளர் தனது வாடகைத்தாரர் 'B' என்பவருக்குச் செல்லும் தண்ணீர் விநியோகத்தில் அடிக்கடி இடையூறு செய்கிறார். 'B' -க்கான தீர்வழி யாது?

9. The land is given to the cultivating tenant to cultivate it. But he fails to cultivate the land. Can he get protection under the Tamil Nadu Cultivating Tenants Protection Act 1955? Decide.

பயிரிடும் குத்தகைதாரருக்கு பயிர் தொழில் செய்ய, நிலம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர் நிலத்தில் பயிர் தொழில் செய்யத் தவறுகிறார். அவர் 1955-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு பெற முடியுமா? தீர்வு செய்க.

10. A Muslim family consists of husband, wife and 2 minor sons. The wife has 15 standard acres of stridhana land. Minor Sons have no property of their own. Husband has 25 standard acres of land. Calculate the ceiling limit for the family.

ஒரு முஸ்லீம் குடும்பமானது, கணவன் அவரது மனைவி மற்றும் அவரது இரண்டு இளவர் மகன்களைக் கொண்டுள்ளது. மனைவி பதினைந்து தரநிலை ஏக்கர் சீதன சொத்து கொண்டுள்ளார். இளவர் மகன்களுக்கு சொத்து ஏதும் இல்லை. கணவர் இருப்பத்தைந்து தரநிலை எக்கர் நிலம் கொண்டுள்ளார். அந்தக் குடும்பத்திற்கான நில உச்சவரம்பை தீர்மானிக்கவும்.

Register No. [ ]

# TA3C

5857–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

## INTERPRETATION OF STATUTES

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

### PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The duty of the judiciary is to discover and act according to the true intention of the legislature" – Explain.

   "நீதிமன்றத்தின் கடமை என்பது சட்டம் இயற்றுதலின் உண்மையான உள் நோக்கம் அறிந்து அதன் படி செயல்படுவதே ஆகும்" – விளக்குக.

2. Explain the rules to be followed in interpreting directory and imperative statutes.

   வழியுணர்த்தும் மற்றும் வினை ஏவும் இயற்சட்டங்களை பொருள் விளக்கம் கொள்வதில் கடைபிடிக்கப்பட வேண்டிய விதிகளை விளக்குக.

3. Discuss the nature of construction of a taxing statute.

   வரிச் சட்டத்தின் பொருள் காணும் தன்மையை விவாதிக்கவும்.

### PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate the objects of the General Clauses Act.

   பொது வகையச் சட்டத்தின் நோக்கங்கள் என்ன என்பதை விளக்குக.

5. What are the external aids to construction of a statute?

   செய்சட்டப் பொருள் விளக்கம் காண்பதற்காக உதவும் புற உதவி காரணிகள் யாவை?

6. Examine how the Doctrine of Pith and Substance is used by the courts while interpreting the Indian Constitution.

நீதிமன்றங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் காண்கையில் மையக் கருப்பொருள் கோட்பாட்டை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதை ஆராய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) ut res magis valeat quam pereat

ஒரு விஷயத்தை இல்லா நிலையாக்குவதை விட செயலாக்கம் கொடுப்பதே நன்று

(b) State of Bombay vs. Hospital Mazdoor Sabha

பம்பாய் அரசு எதிர் ஹாஸ்பிடல் மஸ்தூர் சங்கம்

(c) Ejusdem Generis

இனம் கண்டு பொருள் கொள்ளல் விதி

(d) Proviso

வரம்புரை

(e) Non obstante clause

'எது எவ்வாறிருப்பினும்' என்ற வகையம்

(f) Rule of Beneficial Construction

பயன்தரு பொருள் விளக்கம் காணல்

(g) Commencement of Statute

சட்டங்களின் தொடக்கம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' has been detained under the Preventive Detention Act that his presence is endangerous to law and order. But under the Preventive Detention Act, a person can be detained only when his presence is against public order. 'X' challenges the detention order. The state defends that the law and order and public order are one and the same. Decide.

'X'–ன் செயல்பாடு சட்டம் ஒழுங்கிற்கு ஆபத்தாக உள்ளதாக தடுப்புக்காவல் சட்டத்தில் சிறைவைக்கப்படுகிறார். தடுப்புக்காவல் சட்டத்தில் ஒருவரை சிறை வைக்க வேண்டுமெனில் அவரது செயல்பாடு பொது அமைதிக்கு ஆபத்தாக இருக்க வேண்டும் என்று தடுப்புக் காவல் சட்டம் கூறுகின்றது. 'X' அவ்வுத்தரவினை எதிர்க்கிறார். அரசு சட்டம் ஒழுங்கும் பொது அமைதியும் ஒன்றே என்று எதிர்வாதம் செய்கின்றது. தீர்மானிக்கவும்.

9. West Bengal State Legislature made a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the subject falls under List I. The state contended that the law was within the legislative competence of List II. Decide.

ஒலி பெருக்கியை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து மேற்கு வங்க மாநில சட்டமன்றம் சட்டம் இயற்றியது. இச்சட்டம் மத்திய பட்டியலில் உள்ளதால் மாநில அரசுக்கு சட்டமியற்ற அதிகாரம் இல்லை என எதிர் வாதிடப்பட்டது. மாநில அரசோ இது பட்டியல் II ல் வரும் என மறுப்புரை செய்தது. தீர்மானிக்க.

10. Albert & Co. set up its factory in the industrial area on the notification that no tax was payable for the goods exported from that area for 7 years. After 5 years, export tax was imposed by another notification. The same was challenged. Decide.

தொழிற்பேட்டை பகுதியில் அமைக்கப்பட்ட தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 7 ஆண்டுகளுக்கு வரி இல்லை என்ற அறிவிப்பின் அடிப்படையில் ஆல்பர்ட் & கோ தொழில் தொடங்குகிறது. 5 ஆண்டு முடிவில் வேறு ஒரு அறிவிப்பின் மூலம் ஏற்றுமதி வரி விதிக்கப்படுகின்றது. அது எதிர்க்கப்படுகின்றது. முடிவு காண்க.

---

Register No. | | | | | | | | |

**TA3D**

5858–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

COMPANY LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Articles of Association and Memorandum of Association are the two eyes of a company – Explain.

   செயல்முறை விதிகள் மற்றும் அமைப்பு முறையேடு ஒரு நிறுவனத்தின் இரு கண்கள் என்கிறார்கள் – விளக்குக.

2. Explain doctrine of Indoor Management and what are the exceptions to this doctrine.

   உட்புற நடைமுறைக் கோட்பாடு பற்றி விளக்குக. அக்கோட்பாட்டிற்குள்ள விதி விலக்குகள் யாவை?

3. "An auditor is a watch-dog but not a blood-hound". Comment and explain the powers and duties of auditor?

   "தணிக்கையாளர் ஒரு காவல் நாய் தானேயொழிய இரத்த வெறிபிடித்த வேட்டை நாயல்ல" என்னும் கூற்றை விமர்சித்து தணிக்கையாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Distinguish between Public Company and Private Limited Company.

   பொது உடைமை நிறுவனத்திற்கும் மற்றும் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்திற்கும் உள்ள வித்தியாசங்களை விளக்குக.

5. Explain the powers and functions of SEBI.

இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரிக்க.

6. Explain the different modes of winding up of a company.

ஒரு நிறுவனத்தை கலைப்பது குறித்த பல்வேறு முறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Pre-incorporation Contracts

நிறுமம் தொடங்குவதற்கு முன்னுள்ள ஒப்பந்தங்கள்

(b) One man company

ஒரு நபர் நிறுமம்

(c) Woman Director

பெண் இயக்குநர்

(d) Reduction of Share Capital

பங்கு மூலதனத்தின் குறைப்பு

(e) Proxy

பதிலாள்

(f) National Company Law Appellate Tribunal

தேசீய நிறுவன சட்ட மேல்முறையீடு தீர்ப்பாயம்

(g) Powers of Official Liquidator

கலைப்பு அதிகாரியின் அதிகாரங்கள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A company's directors make a call. But one of them had not been validly appointed – can the call be enforced?

ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் வரவழைப்புக் கட்டணத்தை தீர்மானித்தனர். ஆனால் அவர்களில் ஒருவர் செல்லத்தக்க முறையில் நியமிக்கப்படவில்லை. அவ்வரவழைப்பு செயலுறத்தப்பட இயலுமா?

9. Mr. Sundaram who is a member of 'A' Company Ltd. has very recently become an insolvent. Can the insolvent continue as a member of the company?

திரு சுந்தரம் என்பவர் 'அ' நிறுவனத்தின் உறுப்பினர். மிகச் சமீபமாக அவர் நொடிப்பு நிலையராக ஆகினார். நொடிப்பு நிலையினர் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராக இருக்க முடியுமா?

10. A, B, C and D were the members of a company. All the four died in an accident? Whether the company can be dissolved?

அ, ஆ, இ மற்றும் ஈ ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்தனர். நான்கு பேரும் ஒரு விபத்தில் இறந்து விடுகின்றனர். ஆகையால் அந்த நிறுவனம் கலைக்கப்பட முடியுமா?

---

Register No. | | | | | | | | |

# TA3E

5882–23

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

## BANKING LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY * ILLUPPUR - 622102. *

Time : $2\frac{1}{2}$ hours                Maximum : 70 marks

### PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss different types of Banks under the Banking Regulation Act 1949 and state the laws relating to them.

   1949 வங்கி ஒழுங்குமுறை சட்டத்தின் படி பல்வேறு வங்கிகளின் வகைகளை விவாதித்து மற்றும் அதை சார்ந்த சட்டங்களை குறிப்பிடவும்.

2. What are the criminal remedies available to the drawee in case of dishonour of cheque under the Negotiable Instruments Act, 1881?

   மாற்றுமுறையாவண சட்டம் 1881-ன் கீழ் ஒரு காசோலை மதிப்பு மறுக்கப்பட்ட நிலையில் காசோலை பெற்றவருக்கு கிடைக்ககூடிய குற்றவியல் தீர்வழிகள் யாவை?

3. What are the powers and functions of the Reserve Bank of India?

   இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் யாவை?

### PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the risks in opening online accounts without proper introduction.

   உரிய அறிமுகம் இல்லாமல் துவங்கப்படும் இணையவழி கணக்குகளால் ஏற்படும் இன்னல்களை விளக்குக.

5. Explain different types of crossing of cheques.

   பல வகையான காசோலையில் குறுக்குக் கோடிடல்களை (cheques) விவரி.

6. What are the advantages and disadvantages of Nationalisation of Banks in India?

இந்தியாவில் வங்கிகள் தேசீயமயமாக்கப்பட்டதின் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Rights of the customer

வாடிக்கையாளரின் உரிமைகள்

(b) Clayton's case, 1816.

கிளைட்டன் வழக்கு, 1816.

(c) Duties of collecting Banker

வசூலிக்கும் வங்கியரின் பணிகள்

(d) Special types of customers of Bankers

வங்கியின் சிறப்பு வாடிக்கையாளர்கள்

(e) Travellers cheque

பயணிகள் காசோலைகள்

(f) Paying Banker

பணம் கொடுக்கும் வங்கி

(g) Stale note

செல்லா ஆவணம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ravi draws a Bill of Exchange payable at 50 days after the arrival of the ship 'Ganga' at Mumbai. Is the Instrument valid?

ரவி என்பவர் 'கங்கா' என்ற கப்பல் மும்பை வந்தடைந்த 50 நாட்கள் கழித்து பணம் தருவதாக ஓர் மாற்றுச்சீட்டை வரைகிறார். இந்த ஆவணம் செல்லுபடியாகுமா?

9. 'A' draws a cheque in favour of 'B' on 8.3.2021. 'B' presented the cheque in the Bank on 10.3.2021, but on 10.3.2021, 'A' was not alive. Discuss the duties of the bank.

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு 8.3.2021 அன்று காசோலை ஒன்றை வரைகிறார். 'ஆ' அந்த காசோலையை 10.3.2021 அன்று வங்கியில் செலுத்தினார். ஆனால் 10.3.2021 அன்று உயிருடன் 'அ' இல்லை. வங்கியின் கடமைகள் என்ன?

10. A Bill payable with interest at 12% per annum is altered into one payable with interest at 16% per annum. What is the effect of such alteration on the validity of the bill?

வருடத்திற்கு 12% வட்டியுடன் செலுத்தத்தக்க மாற்றுச்சீட்டு ஒன்று வருடத்திற்கு 16% வட்டியுடன் செலுத்தத்தக்கது என்று திருத்தப்படுகிறது. மாற்றுச்சீட்டின் செல்லத்தக்க தன்மையின் மீது மேற்சொன்ன திருத்தத்தின் விளைவு யாது?

---